REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 30உ வெள்ளி (15—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 1உ சனி (16—11—57) [இதழ் 132

6,75,000 தமிழர்கள் நாடற்றவர்களா?

இலங்கைவாழ் இந்தியர்கள் 8 இலட்சத்துக்கு மேற்பட்டோர் சார்பில் இலங்கை அரசாங்கத்திடம், குடியுரிமை கோரி 2,37,034 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன; இலங்கை அரசாங்கம் 2,17,993 மனுக்கள் மீது முடிவு கூறிவிட்டதாம்.

88,819 பேர் சம்பந்தப்பட்ட 22,835 மனுக்கள் மட்டிலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டனவாம். 6,47,360 பேர் சம்பந்தப்பட்ட 1,87,788 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டனவாம். 35,954 பேர் சம்பந்தப்பட்ட 7,370 மனுக்கள் வாபஸ் பெறப்பட்டனவாம். இப்புள்ளி விவரங்களின்படி 6,75,000 பேர் நாடற்றவர்களாகிறார்கள்.

'வடவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வது உங்களுக்குத் துரோகமிழைப்பதாகும்'

'ஆட்சிமொழி பிரச்னை பற்றி மறுபரிசீலனை வேண்டும்'

'தவணை கேட்பது கஷ்டகாலத்தை ஒத்திவைப்பதாகும்'

சட்டக் கல்லூரி மாணவரிடை ஆச்சாரியார்

சென்னை, நவ. 15—

"அரசியல் சட்டத்தின் 348-வது விதி, 'இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி இருக்கும் என்றாலும், சட்டசபைகள் நிறைவேற்றுகிற மசோதாக்கள், சட்ட விதிகள், உப விதிகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டும்; சந்தேகங்கள் எழும்போது ஆங்கில வாசகங்களே அதிகாரபூர்வமானவையாகும்' என்று தெளிவாக வரையறுத்துக் கூறியிருக்கிறது.

"இந்த விதி ஏன் செய்யப்பட்டது? இந்தியையே அவர்கள் விரும்பி ஆட்சி மொழியாக்கினாலும், ஆங்கில வாசகங்கள்தான் திட்டமானவையாக—நம்பகமானவையாக இருக்க முடியும் என்று அவர்கள் கருதினர்; அதனால்தான் அப்படி ஒரு விதி நிர்ணயித்தனர்.

"உயர் நீதிமன்றங்கள், தலைமை உயர் நீதிமன்றம் இங்கெல்லாம் நடவடிக்கைகள், உத்தரவுகள், டிகிரிகள் முதலியன எல்லாம் ஆங்கிலத்திலிருக்க வேண்டும் என்று கூறும் வேறு விதிகள் சிலவும் அரசியல் சட்டத்தில் இருக்கின்றன. ஆட்சி மொழிக்கு விதிக்கப்பட்டுள்ளதுபோல, இந்த விதிகள் எவற்றிற்கும் காலவரம்புகூட விதிக்கப்படவில்லை.

"உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டும் பிழைபற திட்டமாக நடைபெற்றால் போதுமா? நிர்வாகத்தினர் திட்டமின்றி முறை தவறி நடந்துகொள்ளலாமா?

"எனவே, 348-வது விதியின் அடக்கமே, 'இந்த ஆட்சிமொழிப் பிரச்சினையை மீண்டும் பரிசீலிக்க வேண்டும்' என்ற நமது கோரிக்கையை நியாயப்படுத்தப் போதுமானதாகும்"

—என்று திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், நேற்று முன்தினம் சட்டக் கல்லூரி மாணவரிடை பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், பல்கலைக் கழகங்களில் இந்தியைப் புகுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியையும் கண்டித்தார்.

"உத்தியோகங்களுக்குச் செல்லுகிறவர்கள்-இந்தி பேசாத மக்கள் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமெனக் கட்டாயப்படுத்துவது, கொடுங்கோன்மை" என்றும் ஆச்சாரியார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

"இந்திதான் ஆட்சிமொழி என்ற அரசியல் சட்ட விதியைத் திருத்தவேண்டும்.

"சிலர், 'காலவரையறையைத் தள்ளிப்போடலாம்' என்று கருதுகின்றனர். இது, கஷ்டகாலத்தைத் தள்ளிப்போடுவதாகும். நாம் பிரச்சினையை ஒத்திப்போட்டால் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதில்லை. பிரச்சினை, ஒரு காலவரம்பைப் பொறுத்ததாக ஆக்கப்படக்கூடாது.

"இங்குள்ள நிலைமைகளை அறியாத வடநாட்டவர்கள், நாம் ஏதோ பிடிவாதம் காட்டுவதாகவும், அவசரப்படுவதாகவும் அநியாயமாகப் பேசுவதாகவும், நமது வாதங்கள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டன என்றும் கூறுகின்றனர்.

"அவற்றை நான்கூட ஒப்புக்கொள்ளலாம்; ஆனால், இந்த விவகாரத்தில் அவர்கள் செய்வதையும் சொல்வதையும் நான் பேசாமல் ஒப்புக்கொண்டால், அது உங்களுக்கு இழைக்கும் துரோகம என்று கருதுகிறேன்" என்றும் ஆச்சாரியார் அவர்கள் கூறியுள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு' தனி இதழ்

★

தேசீய கௌரவப் பாதுகாப்புச் சட்டம்பற்றி சட்டமன்றத்தில் கடந்த 11—11—57 அன்று அண்ணா அவர்கள் ஆற்றிய உரை—சட்டசபையில் ஆற்றியபடியே—17—11—57 ஞாயிறன்று வெளிவரவிருக்கும் 'நம் நாடு' தனி இதழில் இடம் பெறும்.

சென்னை நகரில், அன்று காலையே இதழ் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியூர் விற்பனையாளர்கள் தங்களின் தேவைக்கு, முன்கூட்டியே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—நிர்வாகி

★★★★★★★★★★★★★★★★★

நிலக்கொடைச் சட்டம்

ஆய்வுக் குழுவில் மு. கருணாநிதி

ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்குப் பின், சென்னை மாநில நிலக்கொடை சட்டத்தை இன்று சட்ட மன்றத்தில் உள்விவகார அமைச்சர் பக்தவத்சலம் கொண்டுவந்தார்; அதுபற்றி ஆராய 24 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது; குழுவில், தோழர் மு. கருணாநிதி அவர்களும் இடம் பெற்றுள்ளார்.

பண்டிதர் அருள்பாலிக்கிறார்!

கருணை மனுமீது விவாதம் நடத்த சம்மதம்தானும்!

தென்னாட்டுப் பாராளுமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களின் பாக்கியமே பாக்கியம்!

புதுடில்லி, நவ. 14—

"1965-ம் ஆண்டிற்குள் இந்தியை ஆட்சிமொழியாக்கிவிட வேண்டும் என்ற இந்தித் திணிப்புக் குழுவின் சிபார்சுபற்றி கருத்தறிவிக்க தென்னாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு சீக்கிரமே வாய்ப்புத் தரப்படுமாம!

இந்த ஆட்சிமொழிப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக, சீக்கிரமே காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் தென்னாட்டு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

தென்னாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் 88 பேர் சேர்ந்து, 'கேர் கமிஷன் அறிக்கையை காங்கிரஸ் கட்சி விவாதிக்கவேண்டும்' என்றும், 'இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கான காலவரம்பை 1990-ம் ஆண்டுவரை நீடிக்கவேண்டும்' என்றும் பண்டித நேருவிடத்தில் மகஜர் மூலம் முறையிட்டிருந்தனர் அல்லவா?

அதன்பேரிலேயே பண்டிதர், மேற்கண்டவாறு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார் என்று தெரியவருகிறது.

விற்பனை வரி, சுங்க வரி இவற்றிற்கு ஒரே மாதிரி விகிதங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மங்கில சர்க்கார்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய உதவி நிதியமைச்சர் பாலிராம் பகத் மக்கள் சபையில் நேற்று தெரிவித்தார்.

'இந்தி வருமோ என அஞ்சற்க'

'ஆங்கிலத்திற்குப் பதில் பல்கலைக் கழகப் போதனா மொழியாக தமிழ்தான்'

சுப்பிரமணியம் அபயம் தருகிறார்?

சென்னை, நவ 14—

"தமிழுக்கும் — ஆங்கிலத்திற்கும் மட்டுமல்ல; தமிழுக்கும்—இந்திக்கும்கூட மோதுதல் இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார், நிதியமைச்சர் சுப்பிரமணியம்!

மேல்சபையில், கல்வித் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்த அவர், இந்திவெறியைக் கண்டிப்பதாகக் கூறி, பெரியார் இராமசாமி போன்றவர்களின் அச்சத்தைப் போக்கவேண்டியது அவசியம்தான் என்றும் கூறினாராம்! இல்லை என்றால், இந்த மாநிலத்தில் இந்தி பரவாது என்றும் எடுத்துரைத்தாராம்!

"தமிழைப் பொறுத்து, அது பள்ளிகளில் போதனாமொழியாக இருக்கும்; பல்கலைக் கழக மட்டத்தில் போதனா மொழி மாற்றம் ஏற்பட்டால், அது ஆங்கிலத்திற்குப் பதில் தமிழாகத்தான் இருக்குமே தவிர, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியாக இருக்காது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

"'கேரளமும், ஆந்திரமும் இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கின்றன; ஆகவே, தமிழகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று பேசிப் பயன் இல்லை!

"பல்கலைக் கழகங்களில் இந்தியைப் புகுத்த வேண்டும் என்று முயற்சிக்கப்படுவதைபோலன்றி, நமது மாநிலத்தில் தமிழ்தான் பல்கலைக் கழக போதனாமொழியாகும். எனவே, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி வருமோ என்ற அச்சத்தைப் போக்கியாக வேண்டும்.

"கேரளமும், ஆந்திரமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினால், நாட்டின் ஒற்றுமையைக் குலைக்க அதுவே சிறந்த வழியாகிவிடும்; தனித் தமிழ்நாடு வேண்டுமெனப் பேசிவருவோருக்குத்தான் ஊக்கம் தரும்"

என்றும், கனம் சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

திறந்த நூலை ஆலை மீண்டும் மூடப்படும்!

சென்னை, நவ. 14—

சென்னையில், சூளை, வட்டத்திலுள்ள ஆலையை மூடிவிட நிர்வாகிகள் முடிவு செய்து விட்டனராம்.

1938-ல், மூடப்பட்டு மீண்டும் 1956-ல் துவக்கப்பட்ட, இந்த ஆலை சுமார் 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சென்ற ஆண்டில் மட்டும் ரூ. 13 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதே, ஆலை மூடப்படுவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

'இதை அரசாங்கம் ஏற்று நடத்தும் யோசனை இல்லை' என்று அமைச்சர் வெங்கட்ராமன் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது கூறினர்.

நேபாள அமைச்சரவை இராஜினமா

மன்னர் ஆட்சிப் பொறுப்பேற்கிறார்

காட்மண்டு, நவ. 14—

நான்கு மாதங்களுக்கு முன் நேபாளததில் பதவி ஏற்ற டாக்டர் கே. ஐ. சிங்கின் மந்திரிசபை இன்று இராஜினமா செய்துவிட்டது.

மன்னரே ஆட்சிப் பொறுப் பேற்றுக்கொண்டிருக்கிறார்.

கடந்த ஆறாண்டுக் காலத்தில் மட்டும், விழுந்துவிட்ட இந்த மந்திரிசபையைச் சேர்த்து ஆறு மந்திரி சபைகள் பதவியிலிருந்து பார்த்துவிட்டன.

சிங் மந்திரிசபை இராஜினமாவுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நிர்வாக சம்பந்தமான முக்கிய விஷயங்கள் சிலவற்றில் மன்னர் மகேந்திராவிற்கும் பிரதமர் சிங்கிற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுதான் இராஜினமாவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

அ. பொன்னம்பலனர்

நவ. 20-ல் சென்னை துறைமுகம் வந்து சேருவார்

சென்னை, நவ. 15—

மலாயா, சிங்கப்பூர் நாடுகள் சென்றிருந்த திரு. பொன்னம்பலனர் அவர்கள் கடந்த 12-11-57 அன்று, சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு 'எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மதராஸ்' கப்பல் மூலம் 20-ந் தேதி காலை சென்னை துறைமுகம் வந்து சேருவார்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—11—57 வெள்ளி

ஏமாந்துவிடமாட்டார்கள்!

இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தியைத் திணித்து வரும் டெல்லி சர்க்காரின் மூலவரான பண்டித நேரு அவர்கள், இந்தி ஆட்சிமொழியாவது பற்றி கடந்த ஞாயிறன்று பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்த கருத்துக்களுக்கு தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் சில, தாம் விரும்பும் பொருளை வலியக் கற்பித்து, இந்தி எதிர்ப்பாளர்களுக்கும்—இந்தி வெறியர்களுக்கும் ஒரே மூச்சில் அறிவுரை பகர முற்பட்டிருக்கின்றன. இதன் மூலம் அவை, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதிலிருந்து தப்பித்துவிடலாம் என்று கருதுகின்றன போலும்!

நேரு பேசியதாகச் சொல்லப்படுபவைதான் என்ன?

"இந்தியை ஆட்சிமொழியாக்கும்போது இந்தி பேசாத மக்களுக்கு எவ்விதத் திங்கும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

"அரசாங்கப் பதவிகளுக்கான தேர்வுகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கக் கூடாது என்று காங்கிரஸ் கமிட்டி மூன்றாண்டுகளுக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது; இதுவே எனது கருத்துமாகும்."

இவைதான் பண்டிதர் உதிர்த்துள்ள கருத்துக்களாகும்.

இந்தக் கருத்துக்களில், இந்தி பேசாத மக்கள்—இந்தி எதிர்ப்பாளர்கள் மகிழ்ச்சியடையவோ ஆறுதல் பெறவோ இடம் இருப்பதாக எப்படிக் கூற முடியும்?

இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சிமொழியாக ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைக் கொண்டுவருவது இந்திபேசாத மக்களுக்கு எண்ணற்ற தீங்குகளை உண்டுபண்ணும் என்று பண்டிதரே அதே கூட்டத்தில் ஒப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படி ஒப்புக்கொள்ளப்

...மையே தலைகீழாக உருமாற்றியல்லவா பேசியிருக்கிறார்?

'இந்தி என்றென்றைக்குமே கூடாது; ஆங்கிலம்தான் வேண்டும்' என்ற கோரிக்கையை எழுப்பியவர்கள், பண்டிதரின் பேச்சைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ளவா முடியும்?

இந்தியை ஆட்சிமொழியாக்குவதில், இந்தி பேசாத மக்களுக்குத் திங்கு ஏதும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற பண்டிதரின் கருத்தில், அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பது, 'இந்திதான் ஆட்சிமொழியாக்கப்படும்; அதை மாற்றுவதற்கு இல்லை' என்ற முடிவுதானே!

அவரது பேச்சில், இந்தி பேசாத மக்களின் ஆறுதலுக்கு இடம் தேடுகிறவர்கள்—இந்தி பேசாத மக்கள்பால் பண்டிதருக்குள்ள அனுதாபம் அந்தப் பேச்சில் சொட்டுவதாகக் கற்பிக்கிறவர்கள், ஒன்றை மறந்துவிடக்கூடாது—எத்தனை பெரிய அறிவாளிகள்கூடி எவ்வளவு நியாயங்களைத் தொகுத்துக் காட்டினாலும், எங்கள் முடிவு, முடிவானது - இந்திதான் ஆட்சிமொழி—என்ற ஆணவமும் அந்தப் பேச்சில் நிழலாடுவதைத்தான் குறிப்பிடுகிறோம்.

'இப்படிக் கூறுவது, நம்பிக்கையான சிந்தனையின் விளைவல்ல; எப்போதும் அவநம்பிக்கையுடன் எவரையும் அணுகக் கூடாது' என்று, சில அனுபவசாலிகள் கூற முற்படலாம்.

ஆனால் பண்டிதரின் இரண்டாவது வாசகம், நாம் நம்பிக்கையுடன் அவரை அணுகுவதற்குத் துணைபுரியவில்லை.

மூன்றாண்டுகளுக்கு முன்பே காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியதாகக் கூறுகிறார் பண்டிதர்.

ஆனால், அதற்குப் பிறகு தயாரானதுதான் கேர் குழு அறிக்கை; அதில், காங்கிரஸ் தீர்மானத்தின் நோக்கமே அங்கீகரிக்கப்படவில்லை என்பதுதான் உண்மையான நிலை.

'மரம் எங்கு முளைத்தாலும் கனி ஒன்றுதான்'

'மதத்தின் பலன், அதைப் பின்பற்றும் மக்களின் நடத்தையைப் பொறுத்ததே'

'சூழ்நிலையே ஒருவனைக் குற்றவாளியாக்குகிறது'

'சமுதாயத்தை மாற்றியமைத்தால்தான் நல்ல சூழ்நிலை உருவாகும்'

மயிலை நபிகள் நாயகம் விழாவில் அண்ணா ஆய்வுரை

சென்னை—மயிலை அப்துல் மஜீத் படிப்பகச் சார்பில் கடந்த 26—10—57 மாலை நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில், அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"நானும் எனது நண்பர்களும் கடந்த 10—15 ஆண்டுகளாகவே தமிழ் நாட்டிற்கு நன்மையளிக்கக் கூடிய பொதுவான இஸ்லாம் மதக்கருத்துக்களை ஓரளவு விளக்கி வருகிறோம்.

"நாங்கள் நாஸ்திகர்கள் என்ற எண்ணம் மக்களிடையே பரப்பப்பட்டிருப்பதால், நாங்கள் என்ன சொன்னாலும் எங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. மற்றவர்கள் மத நம்பிக்கையுடையவர்கள்—ஆஸ்திகர்கள் என்ற காரணத்தால், அவர்கள் எத்தனை இழிசெயல்களில் இறங்கினாலும் காட்டுமிராண்டித்தனத்தில், மக்களைக் கெடுக்கக் கூடியகாரியத்தில் ஈடுபட்டாலும்-அவர்கள் அசைக்க முடியாத மத நம்பிக்கை கொண்டவர்கள் என்ற ஒரே காரணத்தால் மக்கள் அவர்களை நம்பிவிடுகிறார்கள்.

'எங்கள் நடத்தையில் ஏதேனும் இழுக்கு கண்டுபிடிக்க முடியுமா? கெட்ட வழிகளில் செல்லுகிறோமா நாங்கள் என்பதைக் கூறட்டுமே!

"இந்த விழா நாளில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மதத்தில் நம்பிக்கை உண்டு என்பவர்கள், அந்த மதத்திலுள்ள மாண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்பதை நல்ல முறையிலே வகுத்துக்கொள்ள வேண்டும்.

"ஒரு மரத்தின் கனிதான் சுவை தரக்கூடியதே தவிர, அந்த மரம் இருக்கும் இடம் அல்ல; அது கோபுரத்துக்குப் பக்கத்திலே இருப்பதால் மாம்பழம் கிடைக்கும்—கொல்லை மேட்டிலே முளைத்த காரணத்தால் நாவற்பழம்தான் கிடைக்கும் என்பதல்ல; மரம் எங்கிருந்தாலும் கனி ஒன்றுதான்.

இருக்கிறார்களே இவர்கள்; இவர்களா குற்றம் செய்திருப்பார்கள்?'—என்று நினைப்பேன்.

"'ஐயா, நீங்கள் எந்தக் குற்றத்தைச் செய்துவிட்டு இங்கு வந்தீர்கள்?'—என்று சிலரைக் கேட்டேன். தாங்கள் செய்த குற்றத்தைச் சொல்லி, மேலும் செய்ய இருந்த குற்றத்தையும் சொன்னார்கள்; இன்னும் சிலர், தாங்கள் செய்த குற்றத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ள இருப்பதாகவும் கூறினார்கள்; அப்பொழுது நானாக மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்—இத்தனை பக்தியும் இருக்க ஈனச்செயலில் ஈடுபடவும், மதத்தில் நம்பிக்கையிருப்பவர்களுக்கு மனம் துணிகிறதே—என்று!

"இங்கு இந்த அலங்காரமான பந்தல் இருக்கிறது; இதற்கு மின்சாரமில்லையானால்—வெறும் கண்ணாடிக் குழாய் மட்டும் இருந்தால் ஒளி கிடைக்காது. அதைப்போல, மனிதனுக்கும் மதம் ஒளிவிளக்கின் உருவுக்குச் சமானமாகும். நம்பிக்கையோடு நடவடிக்கைகளும் நல்லவிதமாக இருக்கும் சூழ்நிலை அமைந்ததால்தான் நல்ல பலன் கிடைக்கும்.

"நானும் எங்கள் கழகத்தவரும் வெளி வேஷத்தை நம்புவதில்லை; உள்ளத்தைதான் கவனிக்கிறோம்; வாய் வார்த்தையைவிடச் செயலை உயர்வாக மதிக்கிறோம்; ஆண்டவனுக்கு அபிஷேகம் ஆராதனை செய்வதால் மட்டும் பயனில்லை' என்கிறோம்.

"முதுகில் மூட்டை சுமக்கும் முனியனும் 'முருகா, முருகா' என்கிறான்; அடுத்தவன் வீட்டுச்சொத்துக்கு ஆசைப்படுபவனும், அநியாய வட்டி-

சூழ்நிலைக்குள்ளானதன் காரணமாக தவறு செய்தவர்களாகவுமிருக்கிறார்கள். பெரும்பாலோர், இன்னின்னவை அக்கிரமங்கள் — இன்னின்னவை கொடிய காரியங்கள் எனத் தெரிந்தும் குற்றம் செய்ய சமுதாயம் இடம்கொடுக்கிறது. எனவே, சமுதாயத்தைத் திருத்தியமைத்தாலொழிய நல்ல சூழ்நிலை அமையாது. சில நேரங்களில் உண்மையாக நடக்கக் கூடியவர்களும் கெட்டவர்களாக மாறிவிடுகிறார்கள்.

"பத்திரிகையில் வேதனைதரும் செய்தி ஒன்றைப் படித்தேன்; நல்ல பஞ்ச காலத்தில்—வெட்டவெளி வழியே மணலில் நடந்து செல்லும் குடும்பம் ஒன்று—(பர்மாவில் ஜப்பான் குண்டு வீசிய காலம் அது. மணிப்பூர்வழியே அந்தக் குடும்பம் நடந்து செல்கிறது)—கணவன், அவன் மனைவி, 2 குழந்தைகள், வயதான தாயார்—இவர்களுடன் மூட்டை முடிச்சுகளையும் சுமந்துகொண்டு செல்கின்றான்; கரடுமுரடான பாதையில் மூட்டைகளையும் தூக்கிக்கொண்டு, ஆகாரமும் இல்லாமல் அவர்களால் நடக்கமுடியவில்லை. எனவே, முதலில் மூட்டை முடிச்சு பெட்டிகளையெல்லாம் ஒவ்வொன்றாக வழியில் போட்டுவிட்டு நடக்கிறார்கள்; பிறகு அவன் தன் தயாரைப் பார்த்து, 'உன்னால் இனி நடக்க முடியாது; எங்களால் தூக்கிச் செல்லவும் முடியாது; நீ இங்கேயே நின்றுவிடு' என்கிறான். 'நான் இங்கு என்ன செய்வது?'—என்று தாயார் கேட்டதற்கு, 'ஆண்டவன் விட்டவழி' என்று கூறிவிடுகிறான். அன்னை பரிதாபத்துடன் பார்க்கிறாள்—இவன் பயங்காமாகப் பார்க்கிறான். பெற்றவளுக்கோ தாய்ப் பாசம்; பிள்ளையோ, 'இரு இரு, இங்கேயே; நாங்கள் போகிறோம்' என்று போகிறான். போகக் காரணமென்ன? சூழ்நிலைதான். பிறகு அவர்கள் என்ன ஆனார்கள் என்ற

...கே, பெரும்பாலும் ...காரர்களைக் கொண் ...கர் குழு தந்த மதிப்பு ...தான் என்றால், நாம ...யோடு எவரையும் ...தற்கு இயலாமலிருப் ...சரியம் என்ன?

...கர், 'இந்தி கூடாது— ...ம வேண்டும்' என்ற ...நல்லறிவாளரின் நியா... கோரிக்கையை மூடி ...விட்டு, கோரிக்கையை ...மாற்றி, 'இந்திதான் ...ழியாகும்' என்று ...ப்பது, இந்திக்கு எதி...ண்டுவரும் எதிர்ப்புச் ...வலுவிழக்கச் செய்...க்கம் கொண்டதாகவும் ...ம். இந்த நோக்கத் ...துணை செய்யவே, ...பேச்சில் கருணை ...வழியக் காண்பதாகக் ...உதவும்.

...கூடாது—ஆங்கிலம் ...ண்டும்' என்றவர்கள், ...ாதத் திறனைக் காட்டுவ...வா, அல்லது ஏதாவது

...கனியைப் பொறுத்திருக்கிறதோ, அதைப்போல, மதத்தின் பலன் அதைப் பின்பற்றும் மக்களின் நடவடிக்கைகளைப் பொறுத்துத்தானிருக்கிறது.

"நான் சிறையிலே இருந்த காலத்தில், சில காட்சிகளைக் காணுவதுண்டு; காலை 6 மணி அடித்ததும், பல கைதிகள் முகத்தை அலம்பிவிட்டு சுத்த ஜலம் கொண்டு (அவர்கள் 'சுத்த ஜலம்' என்றுதான் சொல்லுவார்கள்) திருநீறோ, திருநாமமோ பட்டை பட்டையாக இட்டுக் கொண்டு, கிழக்கே பார்த்து—வானத்தை நோக்கி—சூரியனைக் கும்பிடுவார்கள். அதைக் கண்டதும் எனக்கு, 'சிறையில்தான் இவர்களைச் சந்திக்கிறோமா?' என்ற சந்தேகம்கூடத் தோன்றுவதுண்டு; 'இத்தனை பக்திமானாக

...போங்களுக்காகவோ இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்காவிடின், பண்டிதரின் இந்தப் பேச்சுகண்டு மகிழமாட்டார்கள் என்பது மட்டுமல்ல—ஏமாந்துவிடமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

...ராமா' என்று கடவுளைக் கும்பிடுகிறான். 'உலகில் நல்லவர்களாக இருங்கள்' என்று கூறுபவன் எப்படி நாஸ்திகனாக இருக்கமுடியும்?

"இஸ்லாம் மட்டுமல்ல; எந்த மதத்தில் ஈடுபட்டுள்ளவர்களானாலும், வாழ்க்கை உயரியதாக இருக்கவேண்டும். அது சமுதாயத்தைப் பொறுத்துத்தானிருக்கிறது.

'திருடனுக்குக்கூட முதல் தடவை திருடப் போகும்போது கொஞ்சம் அச்சம் இருக்கத்தான் செய்யும்; 'அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது?—என்று யோசிப்பான். மூன்றாம்முறையாகத் திருடப்போகும்போதுதான் தைரியம் பிறக்கின்றது. வெட்கம், வேதனை, சந்தேகம் எல்லாம் முதல் தடவை குற்றம் செய்யும்போது இருக்கும்.

"சூழ்நிலையே ஒருவனைக் குற்றம் செய்யத் தூண்டுகிறது. குற்றம் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவன்கூட நல்ல மதவேடம் புனைந்தவனாக—பஜனை செய்யக் கூடியவனாக இருப்பதையும் பார்க்கிறோம். சில கைதிகள்

செய்தி கொடுக்கப்படவில்லை.

"இப்படிப்பட்ட கோர சம்பவம் ஏன் நடந்தது? மனித உணர்ச்சிகளுக்கும் சூழ்நிலைதான் காரணம். அதை மாற்றக்கூடிய வகையில் மதத்தில் நல்ல கருத்துக்கள் இருக்கவேண்டும். அதை, கல்வி எடுக்கவேண்டும்.

"'அன்பாக இரு; அடுத்தவனை நேசி; ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காண்பி' என்று ஏசுநாதர் சொன்னார். அப்படியானால், ஜெர்மன் சண்டை எதற்கு? ஜப்பானிலும் மாதாகோவில் உண்டு—ஜெர்மனியிலும் உண்டு. 'ஏசுநாதரே, எங்களைக் காப்பாற்று' என்று ஜெர்மன்காரர்களும் கேட்கிறார்கள்—இங்கிலாந்திலுள்ளவர்களும் முழங்கால் மண்டியிட்டு தலைவணங்குகிறார்கள். போப்பே, 'இத்தாலியரைக் காப்பாற்றுங்கள்' என்றுதான் கேட்கிறார்.

சுற்றுச் சார்பு—சூழ்நிலை, நல்லதாக இருந்தால்—நல்லவைகளை உணரத் தெரிந்தால் அக்கிரமங்கள் நடக்க வழியிருக்காது.

"மிகமிகக் காட்டுமிராண்டிக் காலத்தில், பாலைவனத்தில்,

(4-ம் பக்கம் பார்க்க)

...தான் தமிழக நல்லறிவாளர் பலரும், 'இந்தி கூடாது; ஆங்கிலமே நீடிக்க வேண்டும்' என்று பண்டிதருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தி எதிர்ப்பாளர்கள், இந்தி ஏன் கூடாது என்பதற்காகவும், ஆங்கிலத்தை ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவும், இனிமேல் நியாயங்களைத் தொகுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த நிலையில் பண்டிதர், இந்த—'இந்தி கூடாது; ஆங்கிலமே வேண்டும்' என்ற—கோரிக்கை பற்றி ஏதாவது கூறியிருக்கிறாரா என்றால், இல்லை. இப்படி ஒரு கோரிக்கை இருப்பதாக, தான் அறிந்திருப்பதாகக்கூட அவர் காட்டிக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல—இந்தி எதிர்ப்பாளரின் கோரிக்கை எல்லாம், இந்தியைக் கொண்டுவருவதால் தங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் போக்கவேண்டும் என்பதுதான் என்பதைப்போல—கோரிக்கை

மானத்தி... காங்கிரஸ்... டிருந்த ... அவ்வள... நம்பிக்கை... அணுகு... பதில் ஆ... பண்டி... ஆங்கில... தென்ன... யமான ... மறைத்து... யே உ... ஆட்சிமெ... பேசியிரு... ராகத் தி... சக்திகளை... யும் நோ... இருக்கல... திற்குத் ... அவரது ... பொங்கி... கூறுவது... 'இந்... தான் வே... தங்கள் ... தற்காக...

‘விலை ஏற்றத்தை தடுக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைஎன்ன?’

‘அடுத்த ஆண்டு நிலை மோசமாகும் என்ற அறிவிப்பு வியாபாரிகளைப் பதுக்கலில் ஈடுபடுத்துகிறது’

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி

உணவு உற்பத்திப் பெருக்கம் பற்றி சட்டசபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒன்றின்மீது தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

“நாட்டின் உற்பத்திப் பெருக்கத்தை எந்த அளவுக்கு அதிகப்படுத்துவது; மக்களுக்குத் தேவையான உணவை அளிப்பதற்கு அரசாங்கம் எவ்வித வழிவகைகள் செய்யவேண்டும் என்பன போன்றவற்றைப் பரிசீலனை செய்வதற்காகவும், வியாபாரக் கண்ணோட்டத்தோடு கொள்ளை இலாபம் அடிக்கின்றவர்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவும் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். இதைப் பொதுவாக ஏழைகள் ஏற்பார்கள் — வரவேற்பார்கள்; ஆனால், பெரிய மிராசுதாரர்கள் வரவேற்கமாட்டார்கள்; இந்த விவாதத்தில் கலந்துகொண்டவர்களின் நிலைமையிலிருந்தே இதனைப் புரிந்துகொள்ள முடியும்; எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் வேதரத்தினம் பிள்ளை அவர்கள், ‘இந்தப் பிரச்சினையை கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது’ என்றும், ‘ஏழைகளின் பிரச்சினையாகக் கருத வேண்டும்’ என்றும் கூறினார். அவருக்குப் பிறகு பேசிய கனம் உறுப்பினர்கள் கருத்திருமன், கரியகௌடர் ஆகியோரும், எதிர்க்கட்சித் தலைவரும் பெரும் மிராசுதாரர்களுக்குப் பரிந்து கொண்டு பேசினர்; ‘விலை அதிகமாக உயரவில்லை’ என்று கருத்திருமனும், கரியகௌடரும் பேசினர்; அவர்கள் உண்மையில் ஏழை விவசாயிகள் பக்கமிருந்து பார்த்திருந்தால், இவ்விதம் பேசியிருக்கமாட்டார்கள். ‘ஒரு படி அரிசி ரூ. 2-க்கு விற்றது’ என்று குறிப்பிட்டார்கள், இவ்வித நிலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியம்; இதில் கட்சிக் கண்ணோட்டம் ஒன்றும் கிடையாது; இதில் மிராசுதார்—ஏழை என்ற பிரச்சினையில்லை; எதிர் தரப்பில் இருந்தாலும் சரி—ஆளும் கட்சியின் சார்பில் இருந்தாலும் சரி—விலை குறைய வேண்டும் என்பது எல்லோருடைய கருத்திலும் இருக்கிறது. இந்தப் பிரச்னையில், மிராசுதார்--ஏழைஎன்றில்லாமல்,எல்லோருக்கும் ஒரே நிலை’ என்கின்ற முறையில், இதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

“சோழநாடு: சோறுடைத்து, என்று சொல்லப்பட்ட நாட்டில் இன்று உற்பத்தி குறைந்திருக்கிறது. ‘உற்பத்தி போதும்’ என்று பலர் சொன்னார்கள். அப்படியென்றால், இன்று நாட்டில் ஏன் பற்றாக்குறை நிலைமை இருக்கிறது என்பதையும், இங்கே விளைகின்ற பொருட்கள் எந்தவிதத்தில் பாதுகாக்கப்படுகிறது என்பதையும நாம் கவனிக்கவேண்டும்.

“இன்று விவசாயிகள் குறைந்த விலையில் தங்களுடைய பொருட்களை விற்கின்றனர். தானியங்கள் வியாபாரிகளின் கைக்குச செல்லும்போது, அதனை அவர்கள் பதுக்கிவைத்துவிடுகின்றனர்.

“அடுத்த ஆண்டில், உணவு நிலைமையில் மோசமான நிலை ஏற்படலாம் என்று மத்திய மந்திரி ஜெயின் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்; ‘அடுத்தடுத்து மோசமான நிலை ஏற்படலாம்’ என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது; இதனைப் பார்த்து வியாபாரிகள் பதுக்கலில் ஈடுபட்டுவிட்டார்கள்; இதனைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

“இந்த நிலையில், அரசாங்கமே அறுவடை காலத்தில்—ஏற்கனவே செய்ததுபோல—அதிகமாகக் கவனம் செலுத்தி நெல்லை வாங்கினால், நமக்குத் தேவையான நெல் மார்க்கெட்டில் வந்துவிடும்.

“எதிர்க்கட்சித் தலைவர், ‘உற்பத்தி பெருகியிருந்தும், நியாயமான விலை நிர்ணயிக்கப்படாததால் தானியங்கள் மார்க்கெட்டுகளுக்கு வரவில்லை’ என்று கூறியிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

“அதிக உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு அதிகமாகச் செலவாகிறது. உரத்திற்குக் குறைவான விலை நிர்ணயிக்கவும், எண்ணெய் விலையை குறைக்கவும், மின்சாரம் இரண்டு வேளைகளிலும் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

“விலை உயர்வைத் தடுக்கவும், ஏழை எளியவர்களாக இருக்கும் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்கும்தான் ஆங்காங்கு நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன. ஏற்கனவே போதுமான அளவு நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை; மத்திய அரசு அரிசி தர மறுத்துவிட்டதன் காரணமாக, அவைகளின் எண்ணிக்கையை அரசாங்கம் பாதியாகக் குறைத்துவிட்டது.

“தஞ்சை, திருச்சி, நெல்லை ஆகிய மூன்று மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளும் பற்றாக்குறை மாவட்டங்களாகும். அரிசி விலை அதிகமாக இருப்பது நெசவாளரையும், தாழ்த்தப்பட்டவர்களையும் பாதிக்கிறது. தொழிலாளர்கள் அதிக விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டியிருப்பதால், அதிகக் கூலி கேட்கிறார்கள். எனவே அதிக நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில்—வளவனூரிலிருந்த மூன்று நியாய விலைக் கடைகளை மூடிவிட்டார்கள்; அவைகளைத் திறக்க வேண்டும்.

“உணவு நெருக்கடிக்குக் காரணம், மக்கள் அதிகமாக அரிசி சாப்பிடுவதுதான் என்றும் அரிசியோடு கோதுமையும் சாப்பிட வேண்டும்’ என்றும்கனம் உணவு அமைச்சர் கூறுகிறார்; இதைப் பார்க்கும்போது, வடநாட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பெரிய நீர்த்தேக்கங்களின் பாசன வசதி மூலம் உற்பத்தி செய்த உபரி கோதுமைக்கு இங்கே மார்க்கெட் தேடுவதற்கு இம்மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து இரகசிய உத்தரவு வந்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

“நாம், கோதுமை சாப்பிட்டுப் பழக்கமில்லாதவர்கள்; வேண்டுமானால் வடவர், கோதுமையே சாப்பிடட்டும். அப்படிச் செய்தால் அங்கே அரிசி போவதைத் தடுக்கலாம்.

“இம்மாநிலத்திலுள்ள நியாய விலைக்கடைகளுக்கு அரிசி கிடைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்; நீர்ப்பாசன திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும்’ மேலும் புதிய இடங்களில் அவசியத்தை உணர்ந்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

“கிரியாறு, ஆரணியாறு திட்டத்தை அமுல் செய்தும், ஆரணியாற்றுத் திட்டம் நம்மிடமிருந்து பறிபோகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். ஊற்றுக் கிணறுகளை அவசியமான இடங்களில் தோண்ட வேண்டும்.

ஆற்றுத் தண்ணீர் இறைப்பு திட்டத்தை அதிகமான இடங்களில் அமுல் நடத்தவேண்டும். தாலுகாவாரியாகப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

“நீர்ப்பாசனத் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றுவதில் சில சிக்கல்கள் உள்ளனவென்றும், அதனாலேயே திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதமேற்படுகிறது என்றும் காரணம் கூறப்படுகிறது.

“என்னுடைய தொகுதியில் வேட்டக்காடு பகுதியில் ரூ. 3,000 செலவில் கால்வாய் வெட்டுவதற்கான திட்டமும் இப்படியே தாமதிக்கப்படுகிறது.

“‘நிலம் உழுபவனுக்கே சொந்தம்’ என்ற கொள்கையை அமுலாக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகக் கூறிக்கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மிராசுதார்களை எச்சரிப்பதாகும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதில் தாமதம் கூடாது.

“நிலமில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய ஏழைகளுக்கும் புறம்போக்கு நிலத்தைப் பகிர்ந்து தரவேண்டும்.

“ஆண்டவன் பேராலும், மடாலயங்கள் பேரிலும் ஆயிரக்கணக்கான நிலங்கள் இருக்கின்றன. ஆண்டவனுக்கு அவ்வளவு நிலம் தேவையில்லை; இவைகளை ஏழைகளுக்கும், நிலமில்லாத தாழ்த்தப்பட்ட—பின்தங்கிய மக்களுக்கும் தரலாம்; இதனை ஆண்டவன் திருப்பணியாகக் கருதவேண்டும்.

“இதன் மூலம் உணவுத் தானிய உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவதுடன், பற்றாக்குறையும் தீரும்.”

தி. மு. க. மாணவர் கிளைகள்

★

சென்னை தியாகராயர் கல்லூரி கிளை அமைப்பு

12—10—57 பிற்பகல் 2 மணி அளவில், வண்ணையம்பதி, மிண்ட் சுப்பராயலு நாயுடு வீதியிலுள்ள இளங்கோ படிப்பகத்தில், மேற்படி அமைப்புக் கூட்டம் தோழர் மோசசு தலைமையில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் கழகத்திற்குரிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, சென்னை மாநில சட்ட மன்றத்தில் தி. மு. கழக உறுப்பினர்கள் ஆற்றிவரும் தொண்டைப் பாராட்டியும், அத்தொண்டைத் தொடர்ந்து ஆற்ற அவர்களுக்கு வாழ்த்துக் கூறியும், அவர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டும், தமிழகத்தின்மீது வடவர் வலுக்கட்டாயமாகப் புகுத்திவரும் இந்தி தமிழர்களுக்கு எள்ளளவும் தேவையில்லையென்பதை வலியுறுத்தியதோடன்றி, எதிர்ப்புக் கணைகளைப் பொருட்படுத்தாது மீண்டும் இந்தியை நுழைக்கும் வேலையில் வடவர்—ஆட்சியாளர் ஈடுபடக்கூடாதென எச்சரித்தும் பல தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள்:—செயலாளர்: நீ. அன்புச்செழியன்; துணைச் செயலாளர்: சோதி. மகேசுவரன்; பொருளாளர்: அஞ்சாநெஞ்சன்; விளம்பரக் குழு உறுப்பினர்கள்: சிவகுமார், ஜி. அரங்கநாதன்; நகர, மாவட்டக் கழக உறுப்பினர்கள்: மோசசு, அறிவொளி. செயற்குழு உறுப்பினர்கள்: தி. வேந்தன், முடியரசன், மணி, நடேசன், வளவன், கபூர், சீனிவாசன், சண்முகம், பழனிவேலு.

★

குடந்தை நகர மாணவர் கிளை நிர்வாகிகள் தேர்வு

12—10—57 மாலை 5 மணிக்கு கல்லூரி மைதானத்தில் குடந்தை நகர தி. மு. க. செயலாளர் சு. பத்மனபன் தலைமையில், மேற்படி கிளையின் நிர்வாகிகள்தேர்தல் கூட்டம் நடைபெற்றது; 1957—58-ம் ஆண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: இரா. இராமசாமி; துணைச்செயலாளர்: பி.வி. செழியன்; பொருளாளர்: இரா. கிருட்டிணமூர்த்தி; செயற்குழு உறுப்பினர்கள்: ந. மணியன், பாலசுந்தரம், இராசேந்திரன், பன்னீர்செல்வம், முத்தாலிப், பாலசுப்பிரமணியன், வெங்கடேசன், அன்பழகன், சுப்பிரமணியன், இரா. கோவிந்தராசு, முருகையன், பரமசிவம், மற்றும் 5 உயர் நிலைப்பள்ளிகளிலிருந்தும் 5 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களில் மாணவர் கிளைகளைத் துவக்கி, ஆவன புரியுமாறு கேட்டுக்கொண்டும், தஞ்சை மாவட்ட மாணவர் கழக மாநாடு குடந்தையில் நடத்த செயலாளரை ஆவனபுரியுமாறு கோரியும், தஞ்சை மாவட்ட மாணவர் கழகத்தின் அலுவலகத்தை குடந்தையில் திறப்பதற்குக் கட்டிடம் ஒன்றை வாடகைக்கு அமைப்பதென முடிவு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

சேலம் மாணவர் கிளை அமைப்பு

28—10—57 மாலை 5 மணிக்கு வழக்கறிஞர் சிவப்பிரகாசம் தலைமையில் மேற்படி அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, இவ்வாண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: கி. இராமன்; துணைச்செயலாளர்: வளவன்; பொருளாளர்: அப்துல்பசீர்; செயற்குழு உறுப்பினர்கள்:— அப்புசாமி, கே. ஏ. வின்சன், சி. முத்துகிருட்டிணன், வி. சி. ஜெகன்னாதன், மு. பழனியப்பன், இலட்சுமணன், தேவராசன், மாணிக்கம், இரா. இராதாகிருட்டிணன், பி. எஸ். சீனிவாசன், பி. வ. சண்முகம்.

சேலம் மாவட்டத்தில் புதியதாக கலைக் கல்லூரி ஒன்றையும், தொழில் நுணுக்கக் கல்லூரி ஒன்றையும், பெண்கள் கல்லூரி ஒன்றையும் அடுத்த ஆண்டிற்குள் துவக்கவேண்டுமென சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், சேலம் நகராண்மைக் கழகக் கல்லூரியில் இப்போது நடைபெறுகின்ற மாணவர் உணவு விடுதியில் இடமின்மை காரணமாக மாணவர்கள் தொல்லைபடுகின்றனாதலால் அவ்வுணவு விடுதியை விரிவுபடுத்தி வசதி செய்து கொடுக்குமாறு நகராண்மைக் கழக ஆணையாளரைக் கேட்டுக்கொண்டும், தொலைவிலிருந்துவரும் மாணவர்கள் பகல் உணவு உண்ண சேலம் கல்லூரியில் போதிய வசதியும் இடமுமில்லாது தொல்லைக்கு ஆளாகின்றபடியால், பகல் உணவு உண்ணுவதற்கென ஓர் தனிக்கட்டிடம் கட்டித் தருமாறு நகராண்மைக் கழக ஆணையாளரைக் கேட்டுக்கொண்டும், கல்லூரி வாயிலிலிருந்து கல்லூரி செல்லும் வழி மிகவும் மோசமான நிலையிலிருப்பதால் அதைச் செம்மைப்படுத்தித் தருமாறு நகராண்மைக் கழக ஆணையாளரைக் கேட்டுக்கொண்டும், கலைவாணர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

திருப்பனந்தாள் மாணவர் கிளை துவக்கம்

திருப்பனந்தாள் மாரியம்மன் கோவில் தெருவில், மேற்படி துவக்க விழா 27—10—57 மாலை 5-30 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது; விழாவிற்கு தோழர் ஜி. மகாலிங்கம் தலைமை தாங்கினார். தோழர்கள் கு. இராசமாணிக்கம், சா. மதியழகன், பாண்டியன், மாரிமுத்து ஆகியோர் ‘மாணவர்களும்-இன்றைய சமுதாயமும்’ என்ற தலைப்பில் தெளிவுரையாற்றினார்கள்.

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை

1959-ல் இரண்டாவது ‘ஷிப்டு’ துவங்கும்

புதுடில்லி, நவ. 14—

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில் 1959 எப்ரல் மாதத்தில் எப்போதாவது 2-வது ‘ஷிப்டு’ வேலை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக இரயில்வே உதவியமைச்சர் ஷா நவாஸ்கான் நேற்று மக்கள்சபை கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலையில் அக்டோபர் மாதம் முடிய 213 இரயில் பெட்டிகள் (பெஞ்சுகள் முதலியன இல்லாமல்) உற்பத்தி செய்யப்பட்டன என்றும், இது, திட்ட உச்ச அளவைவிட அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையில் 3,364 பேர் பணியாற்றுவதாகவும், 766 பேர் பயிற்சி பெறுவதாகவும் தெரிவித்தார்.

விசுவம்-பொன்னி

திருமணம்

★

3—11—57 காலை 9-30 மணிக்கு, சென்னை லாயிட்ஸ் சந்து, 53-ம் இல்லத்தில் (சரோடி பிரதர்ஸ் காரியாலயம்) பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் திரு. பி. கே. விசுவத்திற்கும் (‘இன்பக் கனவு’ ஆசிரியர்) ஈரோடு திரு. வை. காசிமுத்து அவர்கள் சகோதரர் குமாரி செல்வி பொன்னிக்கும் திருமணம் நடைபெற்றது.

மணவிழாவில் தோழர்கள் க. அன்பழகன் எம். எல். ஏ., கே. ஆர். இராமசாமி, டி. கே. பகவதி, என். எஸ். நாராயணப் பிள்ளை, சுரதா, ஆர். எம். வீரப்பன் முதலியவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர் விழாவிற்கு வந்திருந்தோரை எம். ஜி. சக்கரபாணி, எம். ஜி. இராமச்சந்திரன், சக்தி; டி. கே. கிருஷ்ணசாமி, சிவாஜிகணேசன், பி. எஸ். வீரப்பா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சிவாஜி-நாடக மன்றத்தினர், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினர் முதலியோர் வரவேற்று, உபசரித்து சிறப்பித்தனர். நடிகர்களும், பட முதலாளிகளும் வந்திருந்து ஏராளமான பரிசுகளை வழங்கினர்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், மணமகன் அவர்களுக்கு கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ரூ. 3,000 க்கு ஒரு வீடு வாங்கி, அந்த வீட்டின் உரிமைப் பதிவுப் பத்திரத்தை அளித்தார். மேலும் மணமகனின் வாழ்க்கை வசதிக்காக ரூ. 3,000 ரொக்கமாக அளிப்பதாக வாக்குறுதியளித்தார்.

முடிவில் வரவேற்புக் குழுவின் சார்பில் வந்திருந்தோருக்கு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 5 அளிக்கப்பட்டது.

மரம் எங்கு முளைத்தாலும்!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அகோரத் தெய்வங்களை வணங்கியவர்களிடையே ஒரே தெய்வம் என்ற கோட்பாட்டை உண்டாக்கினர், நபி நாயகம். ஓநாய்களைப் போன்ற குணம்படைத்தவர்களிடையே மனிதாபிமானம் உண்டாகச் செய்தார். அப்பொழுது சுற்றுச் சார்பு காட்டுமிராண்டித்தனமாக—குத்து வெட்டுகள் நிறைந்ததாக இருந்தகாலம். இந்த 20-ம் நூற்றாண்டிலேயே இந்த நிலை இருக்கும்போது, நபி நாயகம் வாழ்ந்த காலம் எப்படியிருந்திருக்கும்? ஓராயிரம் உருவங்களை வணங்கியவர்களை நல்ல ஒரு மார்க்கத்துக்கு இழுத்துவந்தார், அவர்!

"மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தால் கீழே விழுந்த ஊசியைக் கண்டுபிடிக்கலாம்; இருட்டில் எடுக்கமுடியாது. அப்படி ஒருவன் கண்டுபிடித்து எடுத்து விடுவானானால், அவன் தான் கூர்மையான கண்படைத்தவன் என்று பொருள்.

"நாகரீகக் காலத்தில் சமதர்மமும், சன்மார்க்கமும் பேசுவதிலே ஒன்றும் சிரமமில்லை. அறிவு ஒளி பரவாமல் இருந்த காலம்—நபிகள் நாயகம் வாழ்ந்த காலம்—இருட்டாக இருந்த காலம்; அந்தக் காலத்தில்தான் அவர் மக்களைத் திருத்தினர். அவருடைய சிறந்த பண்புகள் இஸ்லாமியர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் பயன்படும்படிச் செய்யவேண்டும்.

"அந்தச் சூழ்நிலை எப்போது உண்டாகும்? அதற்கு நல்ல ஆட்சி ஏற்படவேண்டும்; நல்ல ஆட்சி ஏற்படவேண்டுமானால் அதற்கான அறிவு ஏற்படவேண்டும். அதற்கு மாறான எண்ணங்கள் போகவேண்டும்.

"நபி நாயகத்தின் அரிய கருத்தை அறிந்து சூழ்நிலையை மாற்றியமைத்தால் நல்ல அரசு ஏற்படும்.

"இப்போது அரேபியாவில் மட்டுமின்றி அமெரிக்காவில் இருக்கிற அமெரிக்கர்களும், இங்கே இருக்கின்ற தமிழர்களும் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவியிருக்கின்றனர். இஸ்லாம் ஒரு உலக மார்க்கமாக இருக்கிறது. மயிலையில் மட்டுமல்ல—மங்கோலியாவிலும், மொசபடோமியவிலும், உலகில் எங்கெங்கு இஸ்லாம் பரவியிருக்கிறதோ அங்கெல்லாம் இத்தகைய விழாக்கள் நடைபெறுகின்றன. உலகில் மிகப் பெரிய மார்க்கமாக இருக்கும் இந்த இஸ்லாம் மார்க்கம் நல்லவிதத்திலே பயன்படவேண்டும். அதற்கு எங்கள் பகுத்தறிவுப் பிரச்சாரமும் பயன்படுமெனக் கருதுகிறேன்.

"இப்படிப்பட்ட விழாக்கள் தவிர மற்ற நேரங்களில் எங்களை, 'கடவுள் உண்டா, இல்லையா?' என்று கேட்பதும், நாங்கள், 'உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?' என்று திருப்பிக் கேட்பது நாகரீகம் அல்ல என்று கருதிக் கோபப்படாமல் பதில் சொல்வதும், இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்துவருவதை அறிவீர்கள்.

இரண்டு பெண்களில் ஒருத்தி மற்றொரு பெண்ணைப் பார்த்து, 'உன் வயது என்ன? என்று கேட்டால், 'ஏன் என் வயதைக்கேட்கிருய்?' என்று கோபத்துடன் கேட்டு, 'உன் வயது என்ன? என்று திருப்பிக் கேட்பாள்! அப்பொழுது, 'என் வயது 14. உன் வயதைச்சொல்' என்பாள். அந்த நிலை, கடவுள் நம்பிக்கை உண்டா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் ஏற்படவேண்டாம். எங்கள் நடத்தையைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"உண்மையான கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் என்ன?

"'மனிதனை சகோதரனாக மதி' —நாங்கள் அப்படித்தான் மதிக்கிறோம்.

"'பிறருக்குக் கேடு விளைவிக்காதே'—நாங்கள் யாருக்கும் தீமை செய்வதில்லை.

"'ஒழுக்கத்துடன் நடந்து கொள்'—சில மடாதிபதிகளாவது ஒழுக்கந் தவறுகிறார்கள், நாங்கள் அப்படியெல்லாம் ஒழுங்கீனமாக நடப்பதில்லை.

"'தன்னாலான உதவியை பிறருக்குச் செய்'—இயன்றவரை செய்து வருகிறோம்.

"'பிறர் படும் வேதனையைப் போக்கு'—நிரந்தரமாகப் போக்க முயற்சிக்கிறோம்; அது தானே எங்கள் வேலை!

"எண்ணெய் வியாபாரத்தில் பல ஆயிரம் ரூபாய் இலாபம் வந்தாலும், விலை 7 அணுவுக்கு வாங்கி 14 அணுவுக்குவிற்பவனைக் கேட்டால், 'ஆண்டவனுக்குப் பொதுவாக இதில் அரையணு கூட இலாபம் இல்லை' என்று சொல்லுவான்; கடவுள் பெயரை இலாபத்தின் பெயரால் பயன்படுத்துவான். அதைக் கேட்காமலா இருக்கிறோம்?

"தி. மு. கழகத்தினரை அனுவசியமாகக் கடவுளைப் பற்றிக் கேட்டால், அதற்காக நாங்கள் வெட்கமோ வேதனையோ படவில்லை.

"இவர்கள் என்னமோ கடவுளைப் பற்றி ஒரு முடிந்த முடிபை வைத்திருப்பவர்களைப் போல—தர்மா மீட்டர் வைத்து அளப்பதுபோல கடவுளைப்பற்றி எண்ணிக்கொண்டு வந்து நம்மிடம் கேட்கிருர்களே, நமக்குத் தெரியவில்லையே—என்று நாங்கள் ஆயாசப்படவில்லை.

"ஒருவன் கரும்புத் தோட்டத்தைக் காட்டி வெல்லம் கேட்டால், அவனைப் பைத்தியக்காரன் என்று கூறுவார்கள். அவன் கேட்டதில் தவறில்லை. கரும்பைப் பிழிந்து காய்ச்சுவதால் தானே வெல்லம் கிடைக்கிறது? 'கண்ணிருந்தும் குருடனுயிருக்கிருயே; கரும்புப் பயிரைப் பார்த்து வெல்லம் கேட்கிருயே?' — என்ருல், 'ஆமாம்; இவ்வளவு கரும்பும் வெல்லம்தானே?'—என்கிருன்.

"அதைப்போல, நாங்கள் கரும்புத் தோட்டத்தைக் காட்டுகிறோம். எங்கள் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார். கரும்புத் தோட்டம்-கரும்புத் தோட்டம்தான்—வெல்லம் அல்ல என்று சொல்வதால் இனிப்பு கெட்டுவிடாது.

"தன் பிள்ளைக்கு 'டைபாய்டு' காய்ச்சல்; இன்னும் கொஞ்சம் நேரத்தில் இறந்துவிடும் நிலையில் பையன் இருக்கிருன்; அந்த நேரத்தில் அவன் டாக்டர் வீட்டுக்கு ஓடுகிருன் என்ருல், அவனைப் பார்த்து மற்றொருவன், 'கடவுள் நம்பிக்கையிருந்தால் நீ ஏன் டாக்டர் வீட்டுக்குப் போகவேண்டும்; கோயிலுக்குப் போ' என்று கூறினுல், அவன் என்ன செய்வான்? அப்படிச் சொன்னவனை ஓங்கி அடிப்பான்; முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனுலும் போவானே தவிர, மறந்தும் கோயிலுக்குப் போகமாட்டான். மனித உள்ளம் அப்படி! எல்லாம் பிறருக்குச் சொல்லும்போதுதான்! தன்னைப் பாதிக்கிற விஷயத்தில் யார் சொல்வதையும் கேட்கமாட்டான்.

"கடையில் வேலை பார்க்கும் ஒரு குமாஸ்தா, ஒரு நாள் வேலைக்குத் தாமதமாக வந்தால் முதலாளி, 'ஏன் தாமதம்?' என்று கேட்பார்; 'மயிலாப்பூர் கோவிலுக்குப் போய்வந்தேன்' என்பான் குமாஸ்தா; உடனே முதலாளி கோபமாக 'ஏண்டா கழுதை; 'மயிலாப்பூரிலே என்ன வாழுது கடவுள்?'—என்பான்; 'நவக்கிரகப் பூசை நடக்கிறது; தரிசிக்கப் போனேன்' — என்ருல், 'உழைச்சுப் பிழைக்கிறதைப் பார்க்காமல், ஏண்டா அங்கேயெல்லாம் போறே?'—என்பார் முதலாளி! அதே முதலாளி எப்படிப்பட்டவராயிருப்பார்? 'அதோ இருக்கிறதே கோயில், அது நான் கட்டியதுதான்' என்று சொல்லிப் பெருமைபட்டுக் கொள்ளக் கூடியவராக இருப்பார்; ஆனுல், இன்னொருவர் கோயிலுக்குச் செல்லும்போது மட்டும் எரிச்சல் வருகிறது, அவருக்கு!

"மேலே இருப்பவன் கீழ் நிலையிலுள்ளவனுக்கு இப்படிச் சொல்லுகிருன். மதம், கீழே யிருப்பவன் மேலேயுள்ளவனுக்கு சொல்லக் கூடியதாக அமையவேண்டும். அரசியலிலும் முன்பு அப்படித்தானிருந்தது. பின்னர் கீழிருப்பவன் மேலே யிருப்பவனுக்குச் சொல்ல ஆரம்பித்தான். அதுதான் ஜனநாயக அரசியலாயிற்று.

(பேச்சு முடியவில்லை)

பன்மொழிப்புலவர் மணிவிழா

சிறப்புக் கூட்டம்

அண்ணு, நெடுஞ்செழியன், கண்ணதாசன் கலந்துகொள்வர்

★

17-11-57 காலை 10-மணிக்கு, சென்னை—மயிலை இராஜேசுவரி பாடசாலையில் (குளக்கரை பஸ் நிலையம் அருகில்) 45-வதுவட்ட தி. மு. க. சார்பில் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் மணிவிழா நிதிக்கான சிறப்புக் கூட்டமொன்று நடைபெறும். அண்ணு, இரா. நெடுஞ்செழியன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தோழர்கள் சேலம்-சீனிவாசன், எர். என். வேலுசாமி குழுவினரின் இன்னிசையுண்டு.

கட்டணம்: ரூ. 2, 1, அணு 8

சிவகாசி கே. வி. கே. சாமி படிப்பக உறுப்பினர்கட்கு:

17—11—57 மாலை 4 மணிக்கு சிவகாசி, சாத்தூர் ரோடிலுள்ள கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

நக்கீரர்பட்டி மன்றம்

16—11—57 மாலை 6½ மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை முருகேசமுதலித் தெரு 2-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் சி. எஸ். கணேசன் தலைமையில் தோழர்கள் கா. வேழவேந்தன், த. ம. இளவழகன் ஆகியோர் 'கொள்கைக்காக மனிதனு? மனிதனுக்காகக் கொள்கையா?' என்பது பற்றிப் பேசுவார்கள்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

16—11—57 மாலை 6 மணிக்கு காட்டுமன்னார்குடி சத்தியவாணி முத்து சொற்பயிற்சி மன்றக் கூட்டம் சின்னமணல்மேடு கிராமத்தில் நடைபெறும்; தோழர்கள் பலர் 'இளைஞர்களும் தி. மு. கழகமும்' என்ற தலைப்பில் பேசுவர்.

* * *

17—11—57 காலை 10 மணியளவில் சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தில் தோழர் அரு. சக்கரபாணி தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். பல தோழர்கள் கலந்துகொள்வர்.

தி.மு.க.-சென்னை மாணவர் கிளை

தோழர்களுக்கு:

★

"சென்னை நகரிலுள்ள தி. மு. க.—மாணவர் கிளைகளடங்கிய கூட்டம் 16—11—57 காலை 9-மணிக்கு நடைபெற இருக்கிறது; கிளைக் கழகங்களின் செயலாளர்கள், நிர்வாகிகள், மாணவ நண்பர்கள், சென்னை நகரிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"அன்று காலை தி. மு. க.—சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைக்கப்பட இருக்கின்றது; சட்டக் கல்லூரியிலுள்ள மாணவர்கள் அனைவரும் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

"பிராட்வேயிலுள்ள சென்டினரி மண்டபத்தில் (பல்கலைக் கழக மாணவர் விடுதி--University Student's Club எதிரிலுள்ள கட்டிடம்) கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

"தி. மு. க.—மாநில மாணவர் கிளையின் முன்னுள் பொதுச் செயலாளர், தோழர் கே. ஏ. மதியழகன் முன்னிலையில் கூட்டம் நடைபெறும்.

"கூட்டத்திற்கு அனைவரும் தவருது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்

டி. கே. பொன்னுவேலு

அமைப்பாளன்,

தி. மு. க.—மாநில மாணவர்கிளை

சென்னை—நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்ற ஆண்டு விழா

அண்ணு கலந்து கொள்வார்

17—11—57மாலை 5½ மணிக்கு சென்னை—நுங்கம்பாக்கம், நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலுக்கு அருகாமையில், சமூக ஊழியர் மன்ற மூன்றும் ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் தோழர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும். அண்ணு அவர்களும், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., வ. சங்கரநாராயணன். தி. சு. கிள்ளிவளவன், கே. முருகேசன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். சேலம்—சீனிவாசன் இன்னிசை வழங்குவார்.

ஐயன்பெருமாள் கோனுருக்குப் பாராட்டு

17-11-57 மாலை 4-15 மணிக்கு திருச்சி நகர மன்றத்தில், அண்மையில் 'செம்பொருட் காட்சியர்' என்ற பட்டத்தால் சிறப்பிக்கப்பட்ட திரு. ஐயன்பெருமாள் (கோனுர்) அவர்கட்கு ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்; திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமைவகிப்பார்; பலர் பாராட்டுரை வழங்குவர்.

இளங்கோ மன்றப் பொதுக்கூட்டம்

16—11—57 மாலை 6 மணிக்கு சென்னை—அயன்புரம் பொன்னுவேல் கிராமணி தோட்டத்தில் (சயானி டாக்கிஸ் அருகில்) இளங்கோ மன்றச் சார்பில் தோழர் உ. கு. வில்லவன் கோதை தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர் கி. மனேகரன், தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., ஆர். ஜார்ஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருவாரூர் டி. என். இராசரத்தினம் இசை மன்றம்

17—11—57 மாலை 6 மணிக்கு திருவாரூர் தெற்கு வீதியிலுள்ள டி. என். இராசரத்தினம் படிப்பகத்தில் மேற்படி மன்றத்தின் இரண்டாவது இசை நிகழ்ச்சி திரு. பி. கணேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். தஞ்சை டி. எஸ். இலட்சுமிகாந்தம்—டி. எஸ். கிருஷ்ணவேணி குழுவினர் இன்னிசை வழங்குவர்.

கழகக் கூட்டங்கள்

சென்னை—2-வதுவட்டம்

இராயபுரம் ஆதம்சாயபு தெரு
பம்பிங் ஸ்டேஷன் அருகில்
17—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. ஆர். அருச்சுனன்
பேசுவோர்:
கி. மனேகரன்
என். சீவரத்தினம்
ஆர். எல். லிங்கராசு
அ. அன்புரோசு
தி. ந. மதிவாணன்

★

திருக்கண்டேசுவரம்

(தெ. ஆ. மாவட்டம்)
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
மாரியம்மன் கோவில் திடலில்
17—11—57 மாலை 4 மணிக்கு
தலைவர்: டி. என். சுந்தரம்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
வே. கிருட்டினமூர்த்தி
கே. ஆர். சபாபதி

★

வெள்ளக்கோவில்

16—11—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்: க. அறிவழகன்

★

சேதுக்குவாய்த்தான்

(நெல்லை மாவட்டம்)
17—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பாலன்
பேசுவோர்:
டி. ஆர். சுப்பிரமணியம்
டி. சேவந்தி
ஆ. அண்ணுமலை
த. தனசேகரன்
முத்து

★

சிறகிழந்தநல்லூர்

தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
17—11—57 மாலை 4 மணிகக்கு
தலைவர்: க. சண்முகம்
பேசுவோர்:
ஏ வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
பொன். சோக்கலிங்கம்
கூ. ஆறுமுகம்
செல்வி இளங்கோ

★

சிதம்பரம்

டவுன் ஹால் திடலில்
17—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்; எம். மாணிக்கம்
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
போன். சோக்கலிங்கம்
டி. கே. கோபாலகிருட்டினன்
கூ. ஆறுமுகம்
செல்வி இளங்கோ
எல். என். இராமலிங்கம்
(மாலை 4-30 மணிக்கு வீரபத்திர சாமி கோவிலிலிருந்து தோழர் ப. து. இரங்கசாமி தலைமையில் இந்த எதிர்ப்பு ஊர்வலம் புறப்பட்டு டவுன் ஹாலை வந்தடையும்.)

★

சேலம் 23-வது வட்டம்

அம்மாப்பேட்டை பலபட்டரை
மாரியம்மன் கோவில் அருகில்
17—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: காதர் பாட்சா
பேசுவோர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. ஏ. வெங்கடாசலம்
எஸ். ஏ. அன்புக்கரசு
கே. ஆர். மாசிலாமணி
ஏ. மாரியப்பன் எம்.சி.
கே. எஸ். மணி

★

திருவத்திபுரம்

காந்தி ஆசிரமத்திற்கெதிரில்
16—11—57 மாலை 6 மணிக்கு
இரா. செழியன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடம் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.